**தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 231 – கடன் இணக்க சபை திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 21 ஆம் திகதி திணைக்களத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 12.00 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 9.38 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2.62 மில்லியன் அதாவது 21.8 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | ரூபா. ஆயிரம் | |
| மீண்டெழுபவை | 11,000 | 8,888 | 2,112 | 19.2 |
| மூலதனம் | 1,000 | 493 | 507 | 50.7 |
| மொத்தம் | 12,000 | 9,381 | 2,619 | 21.8 |

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 23101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா.ஆயிரம் | ரூபா.ஆயிரம் | ரூபா.ஆயிரம் | ரூபா.ஆயிரம் | ரூபா.ஆயிரம் | ரூபா.ஆயிரம் |
| 1,255 | 292 | 355 | 486 | 2,500 | 1,399 |

**2.3 கணக்காய்வு அவதானிப்பு**

கடன் இணக்க சபை திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) | பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | கேள்வி கோரல் பதிவேடு | அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | பெறப்படுகின்ற காசோலைகள், காசுக்கட்டளை போன்றவைகளுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 451 | நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.2.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வறிக்கை 2016 யூன் 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| | 1941 இன் 39 ஆம் இலக்க கடன் இணக்க கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவு | - | சபைக்கு ஒரு அங்கத்தவர் குறைவாக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | 11 ஆவது அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | - | 2013 மே மாதம் முதல் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 237(ஆ) | 472,470 | பொருட்கள் அலுவலக்திற்குக் கிடைத்தமைக்கான சான்றிதழ் இன்றி கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டமை. |

**3.4 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுப்பதற்கு 1,249 விண்ணப்பங்கள் காணப்பட்டதுடன் அதில் 372 விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் போது நிறைவேற்ற வேண்டியிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 30 சதவீதமான அளவு எண்ணிக்கையிலான விண்ணப்பங்களின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுப்பதற்கு 877 விண்ணப்பங்கள் காணப்பட்டது. அந்த விண்ணப்பங்களில் 10 வருடங்களை விட பழைய 21 விண்ணப்பங்களும், 6 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் கொண்டுவரப்படும் 54 விண்ணப்பங்களும் மற்றும் 3 வருடங்களுக்கு மேற்பட்ட 06 வருடங்களுக்குக் குறைந்த காலமாக கொண்டுவரப்படும் 91 விண்ணப்பங்களும் காணப்பட்டன.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | - | 01 |
| (ii) | இரண்டாம் நிலை | 14 | 08 | 06 |
| (iii) | ஆரம்ப நிலை | 06 | 05 | 01 |
| | மொத்தம் | 21 | 13 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தின் செயலாளர் பதவியில் பதில் கடமைக்காக நீதி அமைச்சின் உதவிச் செயலாளர் நடவடிக்கை செயற்பட்டமையினால் திணைக்களத்தின் கடமைச் செயற்பாடுகளுக்காக ஆலோசனைகளையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு நாளாந்தம் நீதி அமைச்சிற்கு உத்தியோகத்தர்களை அனுப்பவேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் நாளாந்த கடமைகளை உரிய வேளையில் மேற்கொள்வதற்கு அது தடையாக இருந்தது.

(ஆ) தட்டெழுத்து உத்தியோகத்தர்களில் மூன்று பேர் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் தேவையான நேரத்தில் வழக்கு அறிக்கைகளை தட்டச்சிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) திணைக்களத்திற்குச் சொந்தமாக இரண்டு வாகனங்கள் காணப்பட்ட போதிலும் சாரதி வெற்றிடம் இருந்தமையால் வாகனங்கள் குறைவான பயன்பாட்டுடனான நிலையில் காணப்பட்டது.